2. தகவல் கோரல்

(அ) சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியை மத்திய அமைச்சர் ஒருவர் மிரட்டியதாக வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தின் நான்கு தூண்களாக விளங்குவதில் ஒன்று நீதித் துறை. இன்றைக்கு அந்த நீதித் துறையினுடைய தூணின் அடித்தளமே அசைகின்ற அளவிற்கு, சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியிடத்தில், பாண்டிச்சேரியைச் சார்ந்த மாணவர் கிருபா ஸ்ரீதர் மற்றும் அவருடைய தந்தையார் திரு. கிருஷ்ணமூர்த்தி ஆகியோருக்கு முன்ஜாமீன் வழங்க வேண்டுமென்று, மத்திய அமைச்சர் ஒருவர் வற்புறுத்தியதால், அதன் விளைவாக, நீதித் துறைக்கே ஒரு களங்கம் ஏற்படுகிற வகையில் இருப்பதால், உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி அவர்கள், 'இதுபோன்ற நிலைகள் கண்டிக்கத்தக்கவை; நீதிபதியை மிரட்டுகின்ற அளவிற்கு ஒரு மத்திய அமைச்சர் நடவடிக்கை மேற்கொண்டிருப்பது கண்டிக்கத்தக்கது' என்று கண்டித்திருக்கிறார்; அரசியல் கட்சிகளும் கண்டித்திருக்கின்றன. ஆனால், இங்கேயிருக்கிற, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்திருக்கிற அமைச்சர் அவர்கள், நேற்றையதினம் பதில் சொல்கிறபோது, யார் என்று குறிப்பிடவில்லை என்று சொன்னார்கள். நான் இங்கே சட்டமன்றத்திலே ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். அந்த நீதிபதியிடத்திலே கேட்டு, விசாரித்து, முழு விவர அறிக்கையை இந்த அரசு அவையில் அளிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட அமைச்சர்மீது நீதிமன்றத்தின் அவமதிப்பு வழக்கைத் தொடர வேண்டுமென்ற நிலையில், நீதித் துறைக்கே இந்த நிலை ஏற்பட்டிருக்கிறதென்று சொன்னால், இந்த அரசு ஏன் இதிலே கருத்துகளை வெளிப்படுத்தவில்லை. அனைத்துக் கட்சிகளும் கருத்துகளை வெளிப்படுத்துகிறபோது, நீங்கள் மௌனம் சாதிப்பதற்கு என்ன காரணம் என்பதை உங்கள்மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2009 ஜூலை 2 முற்பகல் 10-40

நீதித் துறையையே மிரட்டுகிற நிலை இருக்கிறதென்று சொன்னால் நாம் நீதியை எங்கே பெறமுடியும்? தமிழ்நாட்டிலே நீதிபதிகளே, அதுவும், உயர் நீதிமன்ற நீதிபதிகளே அச்சப்படுகின்ற அளவுக்கு இது வெளிப்படுத்தியிருக்கிறதென்பதை நான் இந்த நேரத்திலே வலியுறுத்திச் சொல்வதோடு, நீதிபதிகளுக்கு ஏற்பட்டிருக்கிற நிலையைப் பார்க்கிறபோது, சட்டம்-ஒழுங்கை தமிழ்நாட்டிலே பேணிக் காக்க முடியுமா என்பதில் நாட்டு மக்களுக்கே அச்சம் ஏற்படுகிற நிலை தமிழ்நாட்டிலே உருவாகியிருக்கிறது. அதற்கு இந்த அரசு என்ன பதில் சொல்லப்போகிறது என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, அவ்வளவுதானே? மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாடு மட்டுமல்ல, இந்திய நாடு முழுவதும், குறிப்பாக நாட்டினுடைய தலைநகர் டெல்லி உட்பட பரபரப்பாகப் பேசி, அதிர்ச்சியூட்டக்கூடிய செய்தியாக நாளேடுகளில் வந்துகொண்டிருக்கிறது.

மனிதனுடைய கடைசி நம்பிக்கையாக இருப்பது நீதிமன்றம். அந்த நீதிமன்றத்தில், உயர் நீதிமன்றத்தினுடைய நீதிபதி ஒருவர் மிரட்டப்படுகிறாரென்று சொன்னால், மக்கள் எங்கே போய் நிற்பார்கள்? அந்த நீதிபதிக்கே பாதுகாப்பு இல்லாத நிலை உருவாகியிருக்கிறதா என்பதே இந்த நாடு முழுவதும் பேசக்கூடிய ஒரு நிலை. ஆகவே, இப்படிப் பேசியிருக்கிற அமைச்சர் யார்? எந்த அடிப்படையிலே பேசினார் என்பதையெல்லாம், அரசு நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், அப்படிப்பட்ட அமைச்சர்மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வர வேண்டும். இன்று உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி சுட்டிக்காட்டுகிறாரென்று சொன்னால், அதில் பொருள் இல்லாமல் இருக்க முடியாது. ஆகவேதான் இதை வலியுறுத்துகிறோம். அதுமட்டுமல்லாமல், மதிப்பெண் சான்றிதழை மாற்றியதாகச் சொல்லப்படுகிற அந்த வழக்கு, சி.பி.சி.ஐ.டி. விசாரித்துக் கொண்டிருக்கிற நிலை. அதிலே அந்த மாணவனுடைய பெற்றோர் என்பவர், ஒரு அமைச்சருடைய பினாமி

2009 ஜூலை 2] [திரு. ஜி.கே. மணி]

என்று மிகப் பெரிய செய்தியெல்லாம் வந்திருக்கிறது, டெல்லியிலே பரபரப்பாகப் பேசப்பட்டது. ஆகவே, அமைச்சருடைய பினாமி என்று சொன்னால், அந்த அமைச்சர் யாராக இருக்க முடியும் என்றுகூட கருத முடியும். ஆகவே, இதிலே அரசு உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

இன்று நாடு முழுவதும் மிக முக்கியமான பிரச்சினை பெட்ரோல், டீசல் விலை உயர்வு. . .

மாண்புமிகு திரு. துரைமுருகன்: இதை முடித்துவிடலாம். பெட்ரோல், டீசல் உயர்வு எல்லாம் அப்புறம் பேசலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அதை allow பண்ண முடியாது. (குறுக்கீடு) No.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று . . . (குறுக்கீடு) நான் உங்களுக்கும் சேர்த்துச் சொல்லிவிடுகிறேன். நீங்கள் பேசினாலும் சரி, நான் பேசினாலும் சரி. (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். அதற்குப் பிறகு, பாலபாரதிகூட சொல்லுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, பாலபாரதி சொல்லுங்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தினுடைய, உயர் நீதிமன்றத்தினுடைய நீதிபதி மிரட்டப்பட்டிருக்கிறார். அதுவும் ஒரு மத்திய அமைச்சர் தொலைபேசி வழியாக மிரட்டினார் என்ற செய்தி வருகிறது. நீதித் துறை என்பது சுதந்திரமாகவும், சுய சார்புத் தன்மையோடும் செயல்படக்கூடிய ஓர் உயர்ந்த துறை. அதனுடைய நீதிபதியே வெளிப்படுத்துகிறாரென்று சொன்னால், அந்த வேதனையை, வலியை இந்தச் சபை உணருகிறது. அந்த முறையில் நம்முடைய உயர் நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி அவர்கள் மூலமாக சம்பந்தப்பட்ட நீதிபதி அவர்கள் என்ன சொல்ல வருகிறார் என்பதை அறிந்து, உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதியின் கவனத்திற்கும், பாரதப் பிரதமர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு சென்று, உரிய நடவடிக்கை எடுப்பதற்குத் தமிழக அரசு--பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.*

திரு. வை. சிவபுண்ணியம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து நேற்றையதினமும் இங்கே விவாதிக்கப்பட்டது. அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொன்னார்கள். குறிப்பாக, இதிலே நாங்கள், எதிர்க்கட்சிகள் தெரிந்துகொள்ள விரும்புவது என்பது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலிருந்து, அதிலே சரியான விடை காண முடியாத சூழ்நிலையிலே, இதனை எழுப்ப வேண்டிய அவசியத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம். அதைவிட ஒரு புதிய செய்தியாக, ஒரு பத்திரிகையிலே வந்திருக்கிற செய்தியாக ஒரு தகவல், நான் கேள்விப்பட்டது, மத்திய அமைச்சரைக்கூட பாரதப் பிரதமர் அவர்கள் அழைத்துக் கண்டித்தார் என்று செய்திகள் வெளியாகி வருகின்றன. அப்படியானால் அந்த அளவுக்குப் போகிறபோது, அமைச்சர் யார் என்றே தெரியாத நிலை இங்கே இருக்கிறது. ஆகவே, ஒரு நீதிபதி சொன்ன விஷயம் என்பது இன்றைக்கு தேசிய அளவிலே பிரச்சினையாக இருக்கிறது.*

நாடாளுமன்றத்திலே அது எதிரொலிக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, இது தமிழகம் சார்ந்த நமது பக்கத்திலே இருக்கிற நிலைமைகளிலே வந்த செய்தியாக இருக்கிற காரணத்தினாலே இதைப் பற்றித் தெளிவுபடுத்துவதற்குரிய முயற்சியை அரசுதான் எடுத்துக்கொள்ள வேண்டும். அமைச்சர் அவர்கள் அதற்கு உரிய பதிலைத் தருவார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை இந்த அவையில் உள்ளவர்கள் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு மத்திய அமைச்சர், தன்னை தொலைபேசியிலே கூப்பிட்டு ஒரு வழக்கிற்காக சிபாரிசு செய்தார் அல்லது மிரட்டினார் என்று ஒரு நீதிபதி சொல்லியிருக்கிறார். ஆனால், அந்த அமைச்சர் யார் என்பதை அவர்தான்* name *பண்ண வேண்டும். இன்னார் செய்தார் என்று சொல்ல வேண்டும். ஆனால் இதுகுறித்து எல்லோரும் இந்தியா முழுவதும் கருத்துகள் தெரிவித்திருக்கிறார்கள்; அதற்குப்*

2009 ஜூலை 2] [திரு. துரைமுருகன்]

பிறகு அவர் ஃபோன் செய்திருந்தார் என்றால், அது உண்மையாக இருந்திருந்தால், அவர் தெரிவித்திருக்க வேண்டும். தெரிவித்ததற்குப் பிறகு "இப்படி நடந்திருக்கிறது; இந்த அரசு அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்தது?" என்று திருப்பி நீங்கள் கேட்டால், அதற்கு நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

அவரே குறிப்பிட்டு யார் என்று பெயரைச் சொல்லாதபோது, நீங்கள் அவர் சொல்லிவிட்டார் என்பதற்காகவே அரசாங்கமே தேடிப் போய் அதைக் கண்டுபிடி, என்று சொன்னால், நாளைக்கு ஒவ்வொருவரும் எதையாவது ஒன்றை சொல்லிவிட்டுப் போய்விடுவார்கள். அவர்கள் பின்னாலே நாங்கள் அலைய முடியாது. ஆக நான் என்ன சொல்கிறேன் என்றால், யார் என்ற பெயரை அவர் சொல்லட்டும்; பிறகு இந்த அரசினுடைய நிலையை நீங்கள் கேட்பதிலே நியாயம், பொருள் உண்டு. அதைவிட்டுவிட்டு ஏதோ நீங்கள் எல்லாம் நீதியின்பால் பற்றும், பரிவும், மதிப்பும் கொண்டவர்கள் போலவும், இந்த அரசு அப்படி இல்லாதது போலவும் தெரிவிக்கிறீர்கள். எங்களுக்கு நீதிபதிகளை மிரட்டத் தெரியாது, எங்களுக்கு நீதிபதிகளின் மருமகன்கள்மீது கஞ்சா வழக்குப் போடத் தெரியாது. நீதிபதிகளைக் காரில் ஏற்றிக் கொல்லத் தெரியாது.

நீதிபதிகளைப் பற்றி இந்தச் சட்டமன்றத்திலேயே ஒரு முதலமைச்சர் எழுந்து "இந்த நீதிபதிகள் என்ன, அவர்கள் எதை வேண்டுமானாலும் பேசுவார்கள், அவர்களும் மனிதர்கள்தான். அவர்கள் வானத்திலிருந்து குதித்து வந்து நீதி சொன்னார்களா?" என்று பேசியதெல்லாம் இந்த record-லே இருக்கிறது. (குறுக்கீடு) அதுமட்டுமல்ல; "எந்த நீதிமன்றமானாலும், நீதிபதிகள் மனிதர்கள்தான்; அவர்களுக்கும் விருப்பு வெறுப்புகள் உள்ளன." (குறுக்கீடு) உங்கள் அம்மா பேசியதுதான்; முன்னாள் முதலமைச்சர் அவர்கள் பேசியதுதான். "நீதிபதிகள் சில சமயங்களில் பேசக்கூடாதவற்றையெல்லாம் நீதிமன்றங்களிலே பேசுகிறார்கள். இதையே நாங்கள் பேசினால் எங்கள்மீது Contempt of Court வழக்குப் போடுவார்கள். ஆனால் நீதிபதிகள் என்ன செய்தாலும், என்ன சொன்னாலும், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அல்லது அதற்குக் கண்டனம் தெரிவித்து நாங்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்தால், எங்கள்மீது Contempt of Court வழக்கு வருகிறது; ஆனால், நீதிபதிகள் என்ன வேண்டுமானாலும் பேசலாம்" என்று இந்த அவையிலேயே சொன்னவர்தான் முன்னாள் முதலமைச்சர்; அந்த வாரிசுகள்தான் நீங்கள். எனவே, நீதிமன்றங்களைப் பற்றி நீங்கள் பேசக்கூடாது.

நியாயமாகச் சொல்ல வேண்டுமென்றால். நீங்கள் அன்றைக்கு நீதிபதிகளை ஆட்டி வைத்தது; நீதிமன்றத்தைப் பணியவைத்தது; அடேங்கப்பா! கோர்ட்டுக்குள்ளே போய் நின்று சுப்பிரமணியசாமி வந்தபோது அங்கே எல்லோரையும் கொண்டுபோய் நிற்க வைத்து சின்ன சின்ன கொடிகளைக் காட்டி, அதைப் பார்த்தீர்களல்லவா? அசிங்கம் பண்ணியதை, dettol ஊற்றி அல்லவா அந்த நீதிமன்றத்தைக் கழுவ வேண்டியிருந்தது நீங்கள் செய்த வேலைக்கு? எனவே, சுருக்கமாகச் சொன்னால், யார் வேண்டுமானாலும் நீதிமன்றங்களைப் பற்றிப் பேசலாம், உங்களுக்கு ஒரு humble request நீங்கள் வாயைத் திறக்காதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன் (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். என்ன செங்கோட்டையன்?

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றும் சொன்னேன். இன்றும் சொல்கிறேன். மாண்புமிகு நீதிபதி அவர்கள் குறிப்பிட்டு எந்தப் பெயரையும் சொல்லவில்லை. ஆனால் இவர்கள் நித்தம் நித்தம் வெளியிலே போவதற்கு ஒரு வழி தேடுகிறார்கள். வெளியே செல்வதென்றால் சீக்கிரம் வெளியே போங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், முதலிலே உங்கள் உறுப்பினர்களை உட்காரச் சொல்லுங்கள். நேற்று என்ன சொல்லியிருக்கிறேன்? நீங்கள் எழுந்திருந்து நிற்கும்போது மற்றவர்களை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்களை உட்காரச் சொல்லுங்கள், உங்களுக்குப் பேச அனுமதி தருகிறேன். பேசுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது 'மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுபோடுகிற' வேலை இங்கு வேண்டாம். நாங்கள் கேட்ட கேள்வி என்ன? சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியை மத்திய அமைச்சர் மிரட்டியிருக்கிறார்: ஜாமீன் வழங்க வேண்டுமென்று கேட்டு மிரட்டியிருக்கிறார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2009 ஜூலை 2]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் மிக மிகப் பொருத்தமான ஒரு பதிலைச் சொல்லியிருக்கிறார். நீதிபதிகள் சொன்னதையெல்லாம் இங்கேயே பேசியிருக்கிறபோது, ஒரு நீதிபதி எந்த அமைச்சர் என்று பெயரைக்கூட சொல்லாமல் இருக்கிறபோது, எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்? யார் என்ன செய்ய முடியும்? அமைச்சர்மீது என்ன நடவடிக்கை எடுக்க முடியும்? இது ஒன்றும் 'மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு' போடுவது என்பது கிடையாது. இது முடிச்சே கிடையாது. சென்ற தடவை நீங்கள் சட்டமன்றத்தில் இல்லை. சென்றமுறை, "நீதிபதிகள் என்ன, வானத்திலிருந்து குதித்தவர்களா?" என்று கேட்ட முன்னாள் முதலமைச்சர் இருக்கிறார். இதெல்லாம் முழுவதும் record-ல் இருக்கிறது. ஆகவே, எதையும் தவறாகச் சொல்லவில்லை.

(முற்பகல் 10-50

(திரு. எஸ்.வி. சேகர் அவர்களைத் தவிர, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளியேறினர்.)

(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், no. நான் அடுத்த subject-ஐ எடுக்க இருக்கிறேன். *(குறுக்கீடுகள்)* அமைச்சர் பதில் சொன்ன பிறகு, இதிலே விளக்கம் கிடையாது. அடுத்து, நெய்வேலி அனல் மின் நிலைய ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து, அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திருமதி செல்வி ராமஜெயம், திரு. ஆர். சின்னசாமி, திரு. செ.ம. வேலுசாமி, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக . . . *(குறுக்கீடு)* திரு. டி. சுதர்சனம், சொல்லுங்கள்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றி உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி, நீதியரசர் பாலகிருஷ்ணன் அவர்கள், ஒரு கேள்விக்குப் பதில் சொல்கின்றபோது, அங்கேயிருக்கின்ற நீதிபதியே பெயரைச் சொல்லவில்லை; பெயர் சொல்லாதபோது, எப்படி நடவடிக்கை எடுக்க முடியும் என்று நேற்று கூறியிருக்கின்றார்கள். எனவே, அதை நம்முடைய உறுப்பினர் அவர்கள் நன்றாகப் படித்துத் தெரிந்துகொண்டு வந்து, இங்கே

பேச வேண்டும். எதற்கெடுத்தாலும் வெளியே போக வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையிலே இவர்கள் போய்க்கொண்டிருக்கிறார்களே தவிர, என்ன சொன்னார்கள், என்ன நடந்தது என்று இவர்கள் தெரிந்து கொள்ளவில்லை. யார் பெயரையும் சொல்லவில்லை என்று உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி பாலகிருஷ்ணன் அவர்களே சொல்லியிருக்கின்றார்கள். பெயரைக் குறிப்பிடவில்லை என்று அவரே குறிப்பிட்டிருக்கின்றார். இதை நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லவில்லை. உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி பாலகிருஷ்ணன் அவர்களே சொல்லியிருப்பதை ஏற்று, அவர்கள் பேசியதையெல்லாம் நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று வேண்டுகோளாக வைக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் விளக்கமாகப் பதில் சொன்னதற்குப் பிறகு நீங்கள் வேறு என்ன கேட்கப் போகிறீர்கள்? (குறுக்கீடு)

(ஆ) குறிப்பிட்ட சமூகத்தினரின் வழக்குச் சொற்களை அவையில் பயன்படுத்தியமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.வி. சேகர், நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள்?

***திரு. எஸ்.வி. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்தச் சட்டமன்றத்தில், இலங்கைப் போரில் மனித உரிமை மீறல் என்ற தலைப்பில் பேசுகின்றபோது, "அவா, அவா செய்த பாவம், அவா, அவாளுக்கே போய்ச் சேரும். நீங்கள் செய்திருந்தால் நோக்கு, நாங்கள் செய்திருந்தால் நேக்கு" என்று பேசியிருக்கிறார்கள். (குறுக்கீடு) மற்றவர்கள் நீதித் துறையைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நான் சமூக நீதியைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறேன். இந்தச் சமுதாயத்தில் அனைத்து சமூகத்தினருக்கும் உரிமை கொடுக்கப்பட வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், அந்த matter முடிந்தது. No, இது அடுத்த subject-தான்.

திரு. எஸ்.வி. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட சாதியைப் பற்றிப் பேச்சு வழக்கில் உள்ள ஒரு

2009 ஜூலை 2] [திரு. எஸ்.வி. சேகர்]

பேச்சைப் பற்றி, கேலி பேசுவது என்பது, தமிழகத்திலுள்ள அனைத்து பிராமணர்கள் மனதை மிகவும் புண்படுத்தியிருக்கிறது என்பதை நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்ள விருப்பப்படுகின்றேன். ஏனென்றால், இந்த அரசு என்பது, அனைவருக்கும் பொதுவான ஒன்று. அப்படிப்பட்ட சூழ்நிலையில், நாங்களும் எல்லா வரிகளையும் கட்டிக்கொண்டிருக்கிறோம்; நாங்களும் அரசின் எல்லாச் சட்டத்தையும் மதித்துத்தான் நடக்கின்றோம் என்று சொல்கின்ற சமுதாயத்தினரைப் பழித்துப் பேசுவது தவறாக இருக்கிறது. அதேபோல், இது ஒரு நகைச்சுவைக்காகச் சொல்லப்பட்ட விஷயம் என்றால், இலங்கைத் தமிழர்கள் தினந்தினம் அங்கே செத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்தில் செய்யக்கூடிய நகைச்சுவை அல்ல இது என்பதையும் இந்த மன்றத்திலே பதிவு செய்ய நான் விருப்பப்படுகின்றேன். ஏனென்றால் எங்களைப் பொறுத்தவரை, தமிழகத்திலே மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளவர்கள் இந்த பிராமண சமுதாயத்தினர். அவர்களைப் பற்றி இப்படிப்பட்ட கேலி பேசுவது என்பது சரியல்ல. இந்த மொழியை, அவர்கள் வீட்டிற்குள்ளே பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதைப்போய் இங்கே கேலி பேசுவது சரியல்ல.

இந்தச் சட்டமன்றம் கண்ணியமான ஒரு இடம். அனைத்துத் தரப்பினரும் இங்கே இருக்கிறார்கள். சாதி, மதம் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இங்கே மக்களின் குறைகளைப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே, தயவுசெய்து இனிமேல் இப்படிப்பட்ட பேச்சுக்கள் இங்கே இடம்பெறக் கூடாது என்பதற்காகத்தான் இதை நான் பதிவு செய்ய விருப்பப்படுகின்றேன். அதேசமயம், இதனை என்னை இங்கே பேசச் சொல்லி, ஆயிரக்கணக்கான தொலைபேசி அழைப்புகள் எனக்கு வந்தன. குறிப்பாக, மயிலாப்பூர், தி.நகர், தென்சென்னை பிராமணர்கள், திருச்சி, ஸ்ரீரங்கம் பிராமணர்கள், கும்பகோணத்தை உள்ளடக்கிய மாயவரம் பிராமணர்கள் போன்றோர் என்னைத் தொலைபேசியிலே தொடர்புகொண்டு சொன்னார்கள். ஆகவே, என்னுடைய சமூகத்தினுடைய கருத்தை இங்கே பதிவு செய்ய விருப்பப்படுகின்றேன். நான் 51 முறை இரத்த தானம் செய்தவன். அனைத்து சாதி மதத்தினருக்கும் சேர்த்துக் கொடுத்தவன். ஆகவே, எங்களைப் பொறுத்தவரை எல்லோருமே சமம். இறைவனுக்கு முன்னால் அனைவரும் சமம் என்ற ஒரேயொரு வாதத்தைத்தான்

இங்கே வைக்கிறேன். இங்கேயிருக்கும் அனைவரையும் தயவுசெய்து கேட்டுக்கொள்கிறேன். யாரைப் பற்றியும் தாழ்வாகப் பேசிவிடாதீர்கள். கடவுளின் முன்னிலையில் எல்லோருமே உயர்ந்தவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். அதனுடைய அடையாளமாகத்தான் இன்று நான் கறுப்புச் சட்டை அணிந்து வந்திருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்ப்பாக, தீக்குளிக்க பெட்ரோல் ஊற்றிக் கொள்ள வேண்டுமென்றாலும், அதுவும் கூடுதலாக நான்கு ரூபாய் விலையேறி இருக்கிறது என்ற ஒரே காரணத்தினால் . . . இதையும் பதிவு செய்ய விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

(அ) சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியை மத்திய அமைச்சர் ஒருவர் மிரட்டியதாக வந்துள்ள செய்தி—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சியைப் பொறுத்தளவில், திரு. கோ.க. மணி அவர்கள் ஏற்கெனவே பேசிவிட்டார்கள். மீண்டும், மீண்டும் பேசுவதற்கு அனுமதிக்க முடியாது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றம் குறித்துப் பேசுவதற்கு அனுமதி மறுக்கப்படுவதால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள்தான் வல்லடி வம்பு. இவர்கள் கொஞ்சம் argument-ஆகப் பேசுகிறவர்கள், கம்யூனிஸ்டு. இவர்களுமா?